# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௪ | மலர் |
|---|---|---|
| ௩௯ | சோபகிருது, கார்த்திகை. | அ. |
| | 1963 அக்டோபர், நவம்பர். | |


## உண்மை வெல்க!

புலவர். தி. நா. அறிவு ஒளி

உண்மையை அடைய முயலும்போது உண்மையைத் தவிர வேறு எவ்வகை நோக்கமும் இருக்கக் கூடாது. அப்போதுதான் 'உண்மையான உண்மையை' உணர, அடைய முடியும்.

உண்மை எப்போதும் எல்லாருக்கும் மகிழ்ச்சியையே நல்கும் என நம்ப முடியாது. ஆயின், உண்மை நன்மை பயக்கும் என்பது பேருண்மையே.

உண்மையை ஒரு வாணிகப் பொருளாக இக்காலத்தினர் ஆக்கிவிட்ட 'அவல வியப்பு' எண்ணுதொறும் திகைப்பையே விளைக்கிறது. ஆயின். இந்நிலை நெடுநாள் வாழாது. பொய்க் கால் குதிரையாட்டம் ஆடுபவர்கள் கட்டை மீதேறி நெடும்பொழுது ஆடுவர். ஆயின், அது ஒரு விளையாட்டுத் தான். வாழ்க்கை முழுதும், இரவு பகல் எப்போதும் அக் கட்டை மீதே நின்று, நடந்து காலங் கழிக்க இயலாது. அது போலவே பொய்யை நம்பி ஆடும் ஆட்டம் சிறு பொழுது போக்கு ஆட்டமாக அமைவதே. அது உண்மையைப்போல 'வாழ்நாள் வழக்காக' வாழ இயலாது.

தமிழ்நாட்டு வரலாறு, இலக்கிய மரபு, வரலாறு, தமிழ்க் கலைத் துறை, முத்தமிழ் இலக்கணம், மரபு, கலைத்திறனாய்வு, பண்பாட்டு ஒழுக்க மரபு, ஆய்வுத்துறை ஆகியவற்றைப் பற்றிப் பல 'பொய்' யுரைகளைச் சிலர் திரித்து விட்டிருக்கின்றனர். நல்ல ஆய்வாளர்களும் பொய்யை, 'மெய்' யென நம்பித் தவறியிருக்கின்றனர்.

வரலாற்று வழுக்கள் (Anachronisms) தமிழக வரலாற்றில் மிகுந்துள்ளன. வரலாற்றறிஞர்கள் துணிவும் ஆற்றலும்

உண்மை தெளியும் பகுத்தறிவாண்மையும் கொண்டு ஆழ்ந்தாராய்ந்து தெளியாமையே இத்தகு வழுக்கள் மிகுந்திருப்பதற்கு அடிப்படைக் காரணம்.

தெளிவான உண்மைகளைக் கூட சில ஆசிரியர்களும், அரசியல் முதலைகளும் வேண்டுமென்றே திரித்து எழுதியும், பொய்த்துப் பேசியும் குழப்பமும் களங்கமும் உண்டுபண்ணி வருகின்றனர்.

நமிழ்நாட்டுக்கெனப் பல துறைகளிலும் தனித் தன்மையும், தனி வரலாற்று மரபும், தனி நாகரிகப்-பண்பாட்டு இயல்புகளும், தனித்த ஒழுகலாறும், கலையொழுக்க மாண்பும் உயர் தனிச்செம்மை சான்ற தமிழ் நெறியும் உண்டு. அதனால்தான் தமிழர் தனிமையியல்பும், உரிமையுணர்வும், அமைதிப் பண்பும், செவ்விய நயத்தக்க நாகரிகமாட்சியும் வாய்ந்தவராக விளங்குகின்றனர்.

இவ்வுண்மையை உணராதவர்கள்தான் தமிழரின் இயல்பை, 'இயற்கையானது' என்றறியாமல் கண்டவாறு கருத்துமிழ்ந்து தாமும் குழம்பிப் பிறரையும் குழப்புவர், இத்தகையோர் முதலில் முறையாகத் தமிழக உண்மை வரலாற்றை ஆழ்ந்து கற்றுத் தெளிய வேண்டும்.

தமிழ்நாட்டைப் புகழ்பவர்களும்–இகழ்பவர்களும்-தமிழகத்தைப் பற்றிப் போதுமான அளவேனும் அறிவு பெருமலே அப்பணியைச் செய்து வருகின்றனர். இவ்விழி நிலை முற்றும் நீங்க வேண்டும். உண்மையை உணரும் ஆர்வமும் முயற்சியும் உடைய அறிஞர்கள் தமிழகத்தின் இலக்கிய–கலை–வரலாற்று உண்மைகளை உணர்த்த வேண்டும்.

சிறைக்கூடமாகச் சில திட்டவட்டங்களை அமைத்துக் கொண்டு அதற்குள்ளேயே தமிழ்க் கலையையோ, வரலாற்றையோ, இலக்கியத்தையோ, பண்பாட்டையோ, தமிழர் வாழ்க்கையோ, கொள்கைகளையோ 'சிறைப் படுத்தி ஆராய்வது' பயனற்றதும் வேண்டாததுமான செயலாகும். இம் முறைகேடான நிலை இனியும் செயல்படக் கூடாது.

முழு உரிமை வாய்ந்த உண்மை இலக்கண எல்லையில் அடங்கும் வகையில் தமிழ்-தமிழர்–தமிழகம் பற்றிய செய்திகளை ஆராய வேண்டும்.

நாம் எல்லாத் துறைகளிலும் நடுநிலை-நேர்மை–அறம்–வாய்மை–ஆகியவற்றைக் கடைப்பிடித் தொழுக வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்த விழைகிறேன்.

சிலர், நம்போலும் விரிந்து பரந்த கொள்கைகளை நம்புவதோ; உண்மையாக ஏற்று ஒழுகுவதோ உண்டா? சிறு கருத்துக்களுக்கும், நம்பும் தன்மைக்கும் இரையாகி விட்

# சுந்தரனார் செந்தமிழ்ப் பற்றும் சீரிய பணியும்

மது. ச. விமலானந்தம், எம். ஏ.,

ஒன்பதாம் நூற்றாண்டில் ஒண் தமிழ்ப் பணி புரிந்து உயர்ந்தார் செந்தமிழ்ச் சுந்தரர்—சுந்தரமூர்த்தி சுவாமிகள்; பத்தொன்பதாம் நூற்றாண்டில் பைந்தமிழ்ப் பெருந்தொண்டாற்றிச் சிறந்தார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. முன்னவர் இறைப் பணியோடு இத்தமிழ்ப் பணியும் புரிந்தவர்; பின்னவர் தத்துவப் பணியோடு தமிழ்ப் பணியும் ஆற்றியவர். இவர் தொழிலாற்றிய துறை வேறு; தொண்டாற்றிய துறை வேறு. திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பிறங்கியவர், தமிழ்த் துறையில் உள்ளார்க்குத் தமிழ்ப் பற்று உள்ளது என்றிடின் அஃதொரு விந்தைக்குரிய செய்தியுமில்லை; வியப்புக்குரிய பொருளுமாகாது. வேறு துறையில் உள்ளோர் வளர் தமிழ்பால் காதல் கொள்ளின் அது போற்றுதற்குரிய செய்தி; பாராட்டுதற்குரிய பொருள். அம்முறையில் தான் தொழிலாற்றும் துறையோடு அமையாது, தொண்டாற்றுந் துறையாகத் தமிழினைக் கொண்ட பேராசிரியரது பற்று போற்றுதற்குரியது; அருந்தொண்டு பாராட்டுதற்குரியது

இவரது செந்தமிழ்க் காதலும் சீர்சால் பணியும் இரு வகையில் அடங்கும். இவரது வாழ்வு, செயல் கொண்டு இவரது தமிழன்பும் பணியும் காணலாம்; இவை புறநிலையின. இவர் யாத்த மனோன்மணியம் வாயிலாக அறியவரும் அருந் தமிழன்பும் பெருந்தமிழ்ப் பணியும் சில; இவை அகநிலையின. இவ்விரு நிலை கொண்டும் இவரது பற்றும் பணியும் புலமையும் ஓர்வாம்.

தண்ணார் தமிழ் வளர்த்த மண்ணன்றோ பாண்டிய மண்; அம்மண்டிலத்திலிருந்து வணிகத்தின் பொருட்டு மலையாளப்

---

டார்கள் உண்மையை உள்ளபடி உணர்வதும் புரிந்து கொள்வதும் அரிதே.

தமிழினம் ஒழுக்கத்தை நம்பி வாழ்ந்து வளர்ந்த இனம். இவ்வுண்மையை உலகம் மட்டுமன்று; தமிழகமும் நன்குணர வேண்டும். ஒழுக்கத்தைத் தமிழினம் கைவிட்டால் அவ்வினம் பாழ்படும் என்பது திண்ணம். தனி வாழ்க்கையில் மட்டுமின்றி, பொது வாழ்விலும் ஆராய்ச்சிலும்கூட ஒழுக்கத்தையே உயிராகக் கொள்ளவேண்டும்.

—தமிழக வரலாற்றை உருவாக்குபவர்கள் இக்கருத்துக்களை அருள் கூர்ந்து சீர்தூக்கி ஆராய்ந்து, பின் தம் எழுதுகோலினை ஓட்டுதல் நலம்.

பகுதிக்குச் சென்றவர்கள் இவருடைய முன்னோர்கள். எனவே இவர் இயல்பிலேயே தமிழார்வம் மிக்கவராய் இருந்தார். தமிழ் பயிலுதல் இவருக்கு விளையாட்டுப் போல; இளமையிலேயே திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களைக் கற்றுத் தேர்ந்தார் என்றால், இவரது தமிழ் ஈடுபாடு வியப்புக்குரியதாமோ?

எனினும் இன்தமிழ் நிறையப் பயின்றிட வேண்டுமென ஏங்கினார்; தமிழ் வழங்கும் பகுதி விடுத்து, அருந்தமிழ் பற்றியன அறிந்து மகிழும் வாய்ப்போ, அழகு தமிழ்ப் பயலும் சூழலோ இல்லாது தனித்து இயங்கும் நிலை எண்ணி நொந்தே,

'கொடு மலையாளக் குடியிருப் புடையேன்'

என்கிறார். இது கொண்டு இவரது இன்தமிழ்க் காதல் எளிதே உணரலாம். தமிழ் நாட்டில் பிறந்திருந்தால், மாத் தமிழை மிக்க இளமை தொட்டே மிகுதியும் அனுபவித்திருக்க முடியும்; அந்நிலை தமக்கு எய்த இல்லையே எனும் ஏக்கத்தின் எதிரொலியே இக்கூற்றெனலாம்.

தமிழுக்குற்ற பல குறைகள் ஒன்று—தக்க வரலாறு இல்லாமையே! அதற்கொரு உறுதுணையாக—தமிழக வரலாற்றின் ஒரு பகுதியாகிய சேர நாட்டு அரசர் வரலாற்றை அழகுற எழுதினார். இதற்கென இவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமன்று; அரசினர் நெறிப்படுத்தாது இருந்த நாளில், சிலா சாசனங்களை நன்கு ஆய்ந்து கட்டுரையும் நூலும் எழுதினார். திருவனந்தையில் இவரது முயற்சியால் கல்வெட்டு ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப் பெற்றது.

**இலக்கிய ஆராய்ச்சித் துறையில்** இவர் இயற்றிய தொண்டும் அருமை வாய்ந்தது. 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்றாரன்றோ பாரதி! அதற்கோர் எடுத்துக் காட்டாக, தமிழின் கண் உள்ள பழம்பெரும் இலக்கியங்களைப் பிற நாட்டினரும் அறிந்து இன்புறும் வகையில், ஆங்கிலத்தில் சிலபல நூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டார். 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிலோர் மகிமை இல்லை'; நம் பெருமை நம் இலக்கியச் சிறப்பு ஏனை நாட்டவரும்—மொழியினரும் அறிந்துணரச் செய்தல் வேண்டும்; அதுவே சிறந்த பணி; அதனைச் செய்தார் பேராசிரியர். 'திருமுருகாற்றுப்படை,' 'நெடுநல்வாடை,' 'மதுரைக் காஞ்சி' போன்றவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவை முதலில் சென்னைக் கிருத்துவக் கல்லூரி மலர்களிலும், பின்னர் Tamilian Antiquary ஏடுகளிலும் வெளிவந்தன. இவ் ஆங்கில ஆக்கத்தைப் படிப்போர்க்கு மூலத்தைப் படிக்க வேண்டுமெனும்

பேரார்வம் பிறக்கும்; தமிழில் உள்ள உயிர்ப்பும் துடிப்பும் இப் பெயர்ப்பிலேயே அமைதலைக் காணலாம். இத்தகு மொழி பெயர்ப்பே பேராசிரியரது பைந்தமிழ்ப் பற்றும் பயிற்சியும், கவிச்சுவை தேரும் ஆற்றலும், அதனை அப்படியே ஆங்கிலத் தில் வடித்திடும் வளமையும காட்டும்.

இலக்கியத்திலே தோய்ந்து மகிழ்ந்தமை போன்றே, **இலக்கிய வரலாற்று ஆராய்ச்சியிலும்** ஈடுபட்டிருந்தார். அந் நாளில் தமிழ் இலக்கிய வரலாற்றில் உண்மைக்கு இடமின்றி, பொய்மையும் ஒருபால் கோடிய நிலையுமே இருந்தன; ஆரா யும் நெறியில் வழியும் வகையும், முறையும் துறையும் இல்லா திருந்தன. எனவே, இத்துறையிலும் நல்லதோர் வழி வகுத் திட வேண்டுமென எண்ணி ஈடுபட்டார்; அதன் பயனே 'ஞானசம்பந்தரது காலம்' பற்றிய ஆய்வு—'தமிழ் இலக்கிய வரலாற்றில் சில கற்கள்' (Some mile stones in Tamil Literature) கல்வெட்டோ பிற சான்றுகளோ தெளிவுபடாத காலத்தில் அவர் கண்ட முடிவு, பிற்றை நாளில் கிடைத்த கல்வெட்டு போன்ற பிற சான்றுகளால் உண்மையென உறுதி செய்யப் பட்டது. இவ்வாராய்ச்சி, தமிழ் இலக்கிய வரலாற்று ஆய் வுக்கோர் எடுத்துக்காட்டாக—கலங்கரை விளக்கமாக அமைந்துளது என்றால் மிகையாகாது. இத்துறையில் இவர் முன்னோடி (Pioneer) என்றே இயம்பவேண்டும். இப்பிரிவில் நெறிமுறை காட்டிய பெருமை இவரையே சாரும்.

தமிழுக்கு அமைந்த மற்றொரு குறை தக்கதோர் **இலக்கிய வரலாறு** இல்லாமை. எனவே நடுநிலை தவறா முறையில் ஓர் இலக்கிய வரலாற்று நூல் எழுதிட வேண்டுமென எண்ணி எழுதத் தொடங்கினர். இதற்கெனத் தமிழிலும் ஆங்கிலத்தி லும் அமைந்த நூல்களைத் தேடுவதிலும், சில பல காலங்களை வரையறை செய்தற்குரிய சான்றுகளைத் தேடித் தொகுப்பதி லும் பெரிதும் அல்லலுற்றார்; தமிழ் வழங்கு பகுதியில் இல் லாது, மலையாள நாட்டில் இருந்து கொண்டு இவற்றையெல் லாம் திரட்ட இவர் பட்ட தொல்லை சொல்லி முடியாது. ஆனால் அதனைத் தொடங்கி எழுதி முடியுமுன்னரே அந்தோ! இயற்கை எய்தினர்; கிடைக்க இருந்த ஒரு கருவூலம் கிடைக் காமற் போயிற்று; அந்நூல் எழுதப்பெற்றிருப்பின், தமிழ் இலக்கிய வரலாற்றில் அஃதொரு முதல் நூலாகவும்— முதன்மை சால் பெரு நூலாகவும் பிறங்கியிருக்கும். இனி,

> 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
> பெயர்த்தல் வேண்டும்.'

எனும் பாரதியின் விழைவினை மேற்கொள்ளுமாற்றான்' **தமிழில் தத்துவத்துறையினை** நல்லவண்ணம் அமையச் செய் தார். இத்துறையில் இவர் செய்த பெருந் தொண்டு

யாதெனில், தமிழகத் தத்துவக் கேள்விகளோடு, ஐரோப்பிய அறிஞர்களது கருத்தையும் தழுவி நூல்கள் இயற்றியமையே! பொது மக்களும் அறியும் வகையில் அரிய பல சொற்பொழிவுகள் செய்தார். இவை, 'நூற்றொகை விளக்கம்' என்ற பெயரில் வெளிவந்துளது. இது மொழி பெயர்ப்பு நூல் ஆகாது; தமது கருத்தையும் மேலை நாட்டவர் கருத்தையும் ஒட்டியும் உறழ்ந்தும் செல்லும் உயரிய நூல் (a blending of the Tamilian and the western modes and conception of Philosophy). மெய்ஞ்ஞானத்தை விஞ்ஞான முறையில் வகைப்படுத்தியுள்ளார். (Scientific classification of Philosophy).

இந்நூல் தத்துவத் துறையில் புதியதோர் நெறியினை வகுப்பதோடு, இற்றை நாளில் பெரிதும் பேசப்படும்—வலியுறுத்தப் பெறும், 'கலைச் சொல்லாக்கம்' என்ற துறைக்கு ஒரு முன்னோடியாகவும் அமையும். ஆங்கிலத்தில் உள்ள பல விஞ்ஞானத் தொடர்களுக்கு அரிய தமிழாக்கம் செய்துள்ளார். சொல்லாக்க முறையில் இவர் கொண்ட முறையும், காட்டிய நெறியும் பின்பற்றும் பான்மையன.

இதுகாறும் இவரது தமிழ்ப் பற்றும் துடிப்பும் கண்டோம்; தமிழ் இலக்கியத்திற்கும், இலக்கிய ஆராய்ச்சிக்கும், தமிழ்—தமிழக வரலாற்றுக்கும் இவர் செய்த தொண்டுகள் இன்னின்ன என்பதறிந்தோம்; தமிழைச் செழிக்கச் செய்யுமாற்றான் இவர் தத்துவக் கலையையும், அதன் வாயிலாகக் கலைச் சொல்லாக்க நெறியையும் தமிழுக்குப் படைத்திட்ட பான்மை யுணர்ந்தோம். இவை போன்றனவே பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் தமிழ்ப் பற்றும் தொண்டும் பற்றி வெளிநிலையளவில் ஆசிரியர் என்ற முறையில் நாம் அறிவது; இனி அவர் இயற்றிய நூல் கொண்டு அவரது பற்றும் பணியும் தெளிவாம் :

> 'இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில்
> இயற்றல் வேண்டும்.'

எனும் பாரதியின் கூற்றுக்கு இலக்காக ஓர் இனிய தமிழ் நூலை யாத்துள்ளார் செந்தமிழ்ச் சுந்தரனார். அதுவே 'மனோன்மணீயம்' எனும் நாடகக் காப்பியம். இது தமிழுக்கு அமைந்த திருமாமணி; (தமிழ்) உலகிற்கோங்கிய ஒருமாமணி. இத்தகு அருநூல் தந்தமையே இவரது பெருந் தமிழ்ப் பற்றினைக் காட்டுவதாகும்.

> 'பற்பலர் நின்பெரும் பழம்பணி புதுக்கியும்,
> பொற்புடை நாற்கவிப் புதுப்பணி குயிற்றியும்.'

எனக் குறிப்பிடுமாப் போன்றே, புதுவதாக நூல் இயற்றித் தமிழன்னைக்கு அணி செய்த அண்ணல் சுந்தரனார் பணி பெரிது.

ஆங்கில முன்னுரையில் [1]அவரே இயம்புதற் கிணங்க, ஆங்கிலத்திலும் வடமொழியிலும் இருப்பது போன்று தமிழில் நாடக நூல் இல்லாக் குறையைப் போக்கும் வகையில் முதன் முதல் முயன்று நல்லதோர் நாடகத்தை நமக்கு அளித்துள்ளார். முத்தமிழில் நாடகம் ஒரு பகுதியெனவும், அது பற்றிச் சிலப்பதிகாரம் போன்றவற்றின் உரைகளிலே நிறையப் பேசப்படுகின்றன என்றும், சைன-பௌத்த சமயங்களால் பழம் நாடகங்கள் அழிந்துபோயின என்றும் நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் பெருமை யுண்டோ? நாடகம் என்று ஒன்றைச் சுட்டிக் காட்ட வகையில்லாதிருந்த நமக்கு நல்லதோர் நாடகம் தந்திட்டார் 'நற்றமிழ் நாடகத் தந்தை' —'வளர்தமிழின் விடிவெள்ளி' நம் பேராசிரியர். அவரது செந்தமிழ்ப் பணி நினைந்து போற்றத் தக்கது; நீடு புகழ்தற் குரியது.

நாடக முதல்நூலை நமக்கு அளித்தமைபோன்றே, நந்தமிழ் அன்னையை முதன்முதல் தெய்வமாக வைத்துப் புதியதோர் (சமய) நெறி வகுத்தார் நம் சுந்தரனார். முதன்முதல் தமிழைத் தெய்வமாக வைத்து வணங்கியும் வணங்குமாறும் செய்த சிறப்பு இவரையே சாரும். இதற்குமுன், இறைமையையும் இயற்கையையுமே வழுத்திவந்த மரபினை மாற்றி, மொழியைத் தெய்வமாக்கி வாழ்த்தி வணங்கி, அதன் அருமை பெருமையினை ஆணித்தரமாக எழுதியும் ஏத்தியும் உள்ளார். இவ்வகையிலும் இவரது பணி போற்றற் குரியது.

தமிழைத் தெய்வமாக்குகின்றார் பாருங்கள்: 'தமிழ் வாழ்த்து' என்றோ, 'தமிழ்த்தாய் வாழ்த்து' என்றோ விளம்பாது, 'தமிழ்த் தெய்வ வணக்கம்' என்றே இயம்பியுள்ளமை எண்ணுக.

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

உலகம், காற் பகுதி நிலமும், முக்காற் பகுதி கடலும் உடையதன்றோ? அந்நிலத்தை மடந்தையாகவும், நீர்மிகு கடலை அவள் உடுக்கும் உடையாகவும் கொண்டார். [2]அம்

1. Among the rich and varied forms of Poetic composition extant in Tamil language, the Dramatic type so conspicuous in Sanscrit and English, does not seem to find a place Preface.

2. இங்ஙனம் நிலத்தைப் பெண்ணுக உருவகிப்பது மரபு. 'நிலமென்னும் நல்லாள்'; 'மண்மகள்' என்பன போன்றன எண்ணுக. கடலை ஆடையாகக் கருதுதல், 'தூநீர் வளைநரல் பௌவம் உடுக்கையாக' எனும் பெருந்தேவனர் வழக்கு கொண்டு தெளிக.

மடந்தையின்—உலக நாயகியின் சிறப்புமிகு முகமாக இலங்குவதாக பரத கண்டத்தை—இந்தியாவை அமைக்கிறார். (இஃது உண்மைதானே!! உலகப் படத்தைப் பார்க்கும்போது இந்தியா உலகன்னையின் ஒளிமிகு முகமாகவே விளங்குதல் போன்று அமைதலை அறியலாம்). அம் முகத்தில் அமையும் பிறைபோன்ற நெற்றியாகத் தெக்கணமும்—தென்னகமும், அந்நெற்றியில் இலங்கும் பொட்டாக திராவிட நாடும் அமைவதாகச் செப்புகின்றார். இன்னும் அத்திலகத்தின் மணம்போல், அனைத்துலகும் இன்பமுறு மாற்றான் எத்திக்கும் புகழ் ஓங்கி நிற்கும் தமிழாகிய தெய்வமே என்கிறார்.

நிலம்—மடந்தை
கடல்—ஆடை
பரதகண்டம்—அம்மடந்தையின் முகம்
தெக்கணம்—அம்முகத்தில் அமையும் நெற்றி
திராவிடநாடு—அந்நெற்றியில் விளங்கும் பொட்டு
புகழ்—அத்திலக வாசனை
தமிழ்—தெய்வம்.

இங்கே, உலகினைக் காட்டி, இந்தியாவை எண்ணச் செய்து, தெக்கணத்தை நினைவூட்டி, அதில் உள்ள திராவிட நாடும் கூறி, அத்திராவிட நாட்டில் இருந்து எத்திசையும் ஏற்றமுற்று இலங்கும் இன்தமிழ் அன்னையைத் தெய்வமாக்கியுள்ளார். இங்ஙனம் படிப்படியே இவ் ஏழ்கடல் வைப்பினில் இன் தமிழ் நிலையினை நிறுவுகின்றார்.

இங்கே, 'அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழ்' என்கிறார். உலகில், இந்தியாவில், அதுவும் தென்னாட்டில், தமிழகத்தில் இருந்து சிறந்து, உலகெங்கணும் பரந்து உயர்ந்து புகழ்பரவி நிற்கும் பைந்தமிழின் பெற்றி கருதியே இங்ஙனம் இயம்பினார் எனலாம். இதனைத்தான் பாரதியும், 'ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி இசை கொண்டு வாழியவே என்கிறார். ஆம். இக்கூற்றின் உண்மையும் ஒண்மையும், உலகெங்கணும் தமிழ் பரந்து சிறந்து நிற்றல் கண்டும், கடல் கடந்த நாடுகளிலும் கன்னித் தமிழ் பொன்னெனப் போற்றப்படுவது கொண்டும் தெளியலாம்.

இன்னும், கடல், நிலம், பரதகண்டம், தக்கணம், திராவிட நாடு, புகழ், தமிழ், ஆகியவற்றில் ஆடை, பெண், முகம், நெற்றி, திலகம், மணம், தெய்வம் எனும் தன்மையினைக் கண்டும்—அவ்வியல்பினை ஏற்றியும் கூறியுள்ள உருவகநிலை உணர்ந்து மகிழ்தற்பாலது. தமிழைப் பெருந் தெய்வமாகவே நிலை நாட்டிய நீர்மையும் நினைந்து போற்றத்தக்கது. நாவலர் சோமசுந்தர பாரதியும் 'தமதினிய தெய்வமே' என ஏத்திப் புகழ்ந்திருப்பது இவண் கருதத்தக்கது. (தொடரும்)

# கொங்கு நாட்டுச் செங்குன்றூர்

## (திருச்செங்கோடு)

**வித்துவான். சி. கோவிந்தராசனூர்,**
பழம்பொருள் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்

### கொங்கும் செங்கோடும்

நிலமகளின் எழிலுக்கு இலக்காவது மலையும் குன்றும் யாறும் கானும் பொழிலு மாகும். இத்தகைய இயற்கை வனப்பெல்லாம் ஒருங்கே பெற்றநாடு கொங்கு நாடேயாம். 'கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்' என்ற பழமொழியும் கொங்கு நாட்டின் வளத்தையே குறிப்பதாகும். கொங்கு நாட்டின் எல்லைகள் பழைய நூல்களிலிருந்து தெரிய வருகின்றது. அவை—

"வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று—கிடக்கும்
களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்
குளிர்தண் டலையளவு கொங்கு"

என்பதாகும். கோவை மாவட்டத்தில் கொள்ளே காலம் வட்டம் தவிர, அம் மாவட்டத்தின் எஞ்சிய ஒன்பது வட்டங்கள்; சேலம் மாவட்டத்தில் தர்மபுரி, ஓமலூர், ராசீபுரம், சேலம், நாமக்கல் திருச்செங்கோடு ஆகிய ஆறு வட்டங்கள்; திருச்சி மாவட்டத்தில் கரூர்வட்டம்; மதுரை மாவட்டத்தில் பழநி வட்டத்தின் மேற்குப்பகுதி ஆகிய வட்டங்கள் கூடிய பெருநிலப்பரப்பே பழமையாகக்கண்ட கொங்கு நாட்டு எல்லைகளுக்கு உட்பட்ட இன்றைய பகுதிகளாகும்.

பழங்காலத்தில் இங்கொங்கு மண்டலம் இருபத்து நான்கு நாடுகளாகவும், ஆறு இணை நாடுகளாகவும் பிரிக்கப் பட்டிருந்தது, நாடுகளுள் ஒன்ருகியதும், பெரிய நாடென்று சுட்டப்பெறுவதும் கீழ்கரைப் பூந்துறை நாடேயாம். இஃது இன்றுள்ள சேலம் மாவட்ட அளவினதாம். பூந்துறை நாட்டின் தலைநகரம், திருச்செங்கோடு என்று இப்பொழுது பெயர் கூறப்பெறும் செங்குன்றூராகும். கடைச்சங்க காலத்திலேயே இவ்வூர் செங்குன்றூரென்று பெயர் பெற்றிருந்த தென்பதற்கு, செங்குன்றூர் கிழார் என்னும் புலவரொருவர் வாழ்ந்திருந்தமையே சான்ருகும். ஊரின் ஒரு பகுதியாக அமைந்து நிற்கும் குன்று, செங்குத்தாக வுயர்ந்து அழகிய முகட்டுடன் விளங்குவதால் செங்குன்றென்று அழைப் பாராயினர். மலையின் பெயர் ஊருக்குமாகி வந்துள்ள சிறப்

பிடங்களுள் இவ்வூரும் ஒன்ருகும். நெடிய தோற்றமுடைய குன்றை, கோடு என்றழைப்பது இயல்பாகும். குன்றின்மீது குறத்தியொரு பாகமுடைய குமரவேள் இருப்பதாலும், அடியார்களால் பாடல் பெற்றிருப்பதாலும் இத்தலத்தைத் திருச்செங்கோடு என்றழைத்தனர்.

கி, பி. ஏழாம் நூற்ருண்டின் முற்பகுதியில் சைவநலம் பெருக்கிய ஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளிப் பாடிய பதிகத்துள்,

"வெந்தவெண் ணீறணிந்து விரிநூறிகழ் மார்பினல்ல
பந்தண வும்விரலா ளொரு பாக மமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர்நின்ற
அந்தணனைத் தொழுவா ரவல மறுப்பாரே"

என்று சிறப்பித்துள்ளார். இவ்வாறு திகழ்ந்த கொடிமாடச் செங்குன்றூர். கி. பி. 15 ஆம் நூற்ருண்டினராகக் கருதப் பெறும் அருணகிரியாரால் நாகாசலம் என்று சுட்டப்பெறுகின்றது. நாகாசலம் என்பதற்குப் பாம்புமலை என்பதே தமிழாகும், இங்கு சுட்டப்பெறும் பாம்பு ஆதிசேடனுகும். இதற்குறியதாக இவ்வூர் தலபுராணத்தில் கூறப்பெறும் கதை வருமாறு—

முன்னெரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும், அவரவர் தோள்வலியைப்பற்றிப் போட்டியுண்டாயிற்று. தங்களில் யார் மிக்குயர்ந்தவரென்பதைத் தேர்ந்து கொள்ள அவர்கள் செயலொன்றை மேற்கொண்டனர். இமயத்தின் கொடுமுடி யொன்றை ஆதிசேடன் வளைத்துக் கொண்டான். வாயுதேவன் தன் வலியால் அவனை அங்கிருந்தும் அகற்ற முயன்ருன். போட்டி போராக விளைந்தது. உலகம் நிலைகுலையத் தொடங்கியது. தேவர்கள் அஞ்சி, ஆதிசேடனிடம் தலையை உயர்த்துமாறு கேட்டுக் கொண்டனர். அவ்வளவில் வாயுதேவன் தன் முழு வலியால் அவன் உடலில் ஒருபகுதியைக் கிழித்தெறிந்தான். அப்பகுதியுடன் மூன்றுமலை முகடுகளும் தகர்த்தெரியப்பட்டன. அவை, தெற்கே நெடுந்தொலைவில் விழுந்தன. அவற்றுள் ஒன்று ஆதிசேடனின் உடற் கூருெடு விழுந்தது. அதுவே நாகாசலம். மற்றவை, சிராப்பள்ளிமலை, திரிகோண மலைகளாகும்.

### வேலவர் திருமேனி

இம்மலையின் உயரம் தரைமட்டத்திற்குமேல் எண்ணூறடியாகும். மலையின்மேல் இயற்கையாக அமைந்த பரந்த இடத்தில் பெரிய அளவில் சிவன்கோயில் அமைக்கப்பட்

டுள்ளது. எழுநிலைக் கோபுரத்துடன் விளங்கும் இக்கோயிலின் எழிலை, சூழலாக வுயர்ந்துள்ள பாறைகளின் மீதிருந்து பார்க்கின் கண்கொள்ளாக் காட்சியாகும். குன்றமமர்ந்தகுமரவேளின் இடங்களுள் இத்திருப்பதியுமொன்றாகும் இங்கு இலிங்க வடிவில் மூலவர் ஒருபால் அமைக்கப்பெற்றிருப்பினும், நின்ற கோலத்தில் இரண்டு கையுடையாராகவும், உடலின் இடப்பகுதி பெண்ணுருவில் அமைந்தாராகவும் அமைக்கப்பெற்றுள்ள வேலவரே சிறப்புடைய தெய்வமென்று கொண்டாடுகின்றார்கள். வேலவரின் திருமேனி அமைப்பு முற்றிலும் புதுமை நிறைந்ததாகும். இரண்டு கையுடைய தெய்வச்சிலையமைப்பு சிற்பக்கலை வளர்ச்சியில் மிக்கப்பழமையுடையதாகும்.

வேலவர்சிலை மூலிகைக் கலவையால் ஆக்கப்பட்டதென்கின்றனர். அதற்கேற்ப திருமஞ்சன நீராட்டும்போது வழிந்துவரும் நீரினை, இருக்கை யணைக்கல்லிலுள்ள குழிவில் வடித்துக் கொள்கின்றனர். திருவருட் பொருளாக வழங்கப்பெறும் இத் தெய்வத்தன்மையுடைய நீரை நெறியுடன் பருகுவோர்க்கு பல்பிணியும் நீங்குவது நாளும் நிகழும் உண்மையாகும். மருத்துவ நூல் கண்ட ஒன்பதுவகை நச்சுப் பொருள்களை அரைத்துக் கூட்டிச் செய்த குழம்பினால் சிலை அமைக்கப்பட்டதென்றும் செவிவழிச் செய்திகூறும். 'யான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம்' என்னும் பெருநோக்குடைய தமிழகச் சித்தராம் பெருமக்கள் வழிவழி மக்கட்கு நிலையாக வழங்கிய அருள்நிதி போலும்! வேலவரின் உருவ அமைப்பு மிக நுட்பமானதாகும். மேலே தூக்கிய வலது கையில் பிடித்துள்ள வேலாயுதம் போன்ற படை, தூக்கிய கைக்குத் தாங்கலாக இடையில் பொருந்தி நிற்பதுடன், இடது கையை இலாவகமாக இடுப்பில் அமைத்து, முன்னெளிவால் நளினமாக நிறுத்தி. இடது பக்கம் முழுவதையும் பெண்ணுருவில் தோற்றங்கொள்வச் செய்திருப்பதுடன், முகத்தில் அருட்பொலிவு விளங்கச் செய்துள்ள சிற்பியின் கைத்திறனை என் னென்பது! குறிஞ்சிக் கிழவனாகிய முருகனை குறிஞ்சிநிலக் குறத்தியாகிய வள்ளியம்மையொடு ஓருருவில் காண விழைந்த பெருமக்களின் திறனே இத்திருமேனியாகும். சத்தியொடு சிவத்தை ஓருருவிற் கண்டு களித்த சான்றோர்கள் மலைக் கிழவோனையும் தத்துவ வுருவிற் கண்டது இயல்பேயாகும்.

இவ்வுண்மை யறியாதார் சிலர், கொங்கை யொன்றைத் திருகி எறிந்து கூடல் மாநகரை எரித்த மங்கை நல்லாள் கண்ணகி நின்று கணவனுடன் விண்ணுலகடைந்த மலை இச் செங்குன்றென்று மாறுகக் கொண்டு, ஒருபக்கம் நகிலுடன் கூடிய வேலவர் திருமேனியையும் கண்ணகியின் படிவமாகக்

கண்டு, கதை புனைந்து, கட்டியங் கூறிய பின்னர் சின்னாளில் தெளிவுற்றனராம்.

கண்ணகியின் வரலாற்றில், செங்குட்டுவன் மலைவளம் காணச்சென்ற பேரியாற்றங் கரையிலுள்ள செங்குன்றூரி னின்றும் வேறுபடுத்தவே, தேவாரா ஆசிரியருள் ஒருவராகிய திருஞான சம்பந்தர் "கொடிமாடச் செங்குன்றூர்" என்று அடை கொடுத்துக் கூறுவாரானார். மற்றும், கண்ணகி அடைந்த செங்குன்று, மதுரை மாவட்டத்தின் மேற்கு எல்லை யாகத் தொடரும் நெடுவேள் குன்றத்தின் தென் கோடியாக உள்ள நெடிய குன்றாகும். (இச் செங்குன்றைப் பற்றிய ஆராய்ச்சியினைப் பின்னர் கூறுவாம்,) இச் செங்குன்று கோ நகராய் விளங்கிய தென்பதை, சேக்கிழார் "இம்பரும் உம் பரும் ஏத்த இன்னிசை வண்டமிழ்பாடிக் கும்பிடும் ஆதர வுடன் அக்கோ நகரில் இனிதமர்ந்தார்" என்று பாடியுள்ளார். கோநகராய் விளங்கியதிலேயே கொடிகளெல்லாம் காற்றி னால் அசைந்தொளிரும் மாட மாளிகைகள் நிறைந்து விளங்கி யதை சம்பந்தர் நேரிற்கண்டு, அந்நிகழ்ச்சியினையே செங் குன்றூரின் சிறப்பாகக் கூறுமுகத்தான் கொடிமாடச் செங் குன்றென்று கூறுவாராயினர்.

சம்பந்தர் இங்கு எழுந்தருளியபோது உடன்வந்த அடி யார்கள் குளிர் சுரத்தினால் நலிவுற்றார்கள். அப்பொழுது பிள்ளையார், அடியார்களுக்கு ஏற்பட்ட இடரைப் போக்க, "அவ்வினைக்கிவ்வினை"...என்று தொடங்கி, ஒவ்வொரு பாடலிலும் "செய்வினை வந்தெமை தீண்டப்பெறு திரு நீலகண்டம்" என்னும் ஆணையுடன் பதிகம் நிறைவித்தார். குளிர் நோயும் கதிர்கண்ட பனிபோல் நீங்கியது. இங்குள்ள வேலவரின் அருளும், திருஞான சம்பந்தர் பாடிய திருநீல கண்டப் பதிகமும் அடியார்க்கு என்றும் மெய்ப் பொருள் களாகும்.

## மலைமேல் கோயில்

மலைமேலுள்ள கோயில் முழுமையும் கருங் கற்றிருப் பணியாகவே அமைக்கப்பட்டுள்ளது. கி. பி. பத்தாம் நூற்றாண்டளவில் பாண்டிய நாட்டில் வளர்ச்சியுற்ற சிற்பத் திறனைக் கொண்டதாகவே வேலைப்பாடுகள் இருக்கின்றன. மலைமேலுள்ள இக்கோயிலை அடைவதற்கு நன்முறையில் கற்படிகள் தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ளன. நானூறடிக்கு மேல் ஏற்றமாக வளைந்து செல்லும் வழியில், இடையிடையே இளைப்பாறும் மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாயக்க மன்னர்கள் ஆட்சியிலிருந்த தலைவராலும், சைவநலச் செல்வர் களின் முயற்சியாலும் இம்மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன.

நாகாசலம் :

நூறடி உயரவளவில் மலையின் இயற்கை யமைப்பு மட்ட மாகவுளது. இங்கிருந்து மறுபடியும் உயர்ந்து செல்லும் பாதையின் இடப்புறமாகவுள்ளப் பெரும் பாறையில் நெடிதாக பாம்பொன்று செதுக்கப்பட்டுள்ளது. அதனைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கில் சின்னஞ்சிறிய வடிவில் பாம்புகள் உள்ளன. பெரிய நாகம் அங்குள்ள மக்களால் வழிபடப் பெறுகின்றது. இந்நாகமே முன்னர் கூறப்பெற்ற புராணக் கதைக்கு இலக்கான ஆதிசேடனின் அங்கமென்பர். சுற்றிலு முள்ள சிறிய பாம்புகள் வேண்டுதலைக் கொண்டார் கையுறை யாக இட்ட சுவடுகளாகும். இங்கு வலப்புறமாகவுள்ள பாறைப்பகுதி வழவழப்பாக பலகையைப் போன்று படர்ந்து அமைந்துள்ளது. இப்பகுதியின் தொடக்கத்தில் கங்கை, யமுனை, சரசுவதி, என்னும் மூன்று சிறிய சுனைகள் உள்ளன. சுனைகளின் பெயர்களை அருகிலுள்ள கல்வெட்டுகள் உணர்த்து கின்றன. மேற்பகுதியில், பல கல்வெட்டுகள் உள்ளன. பிற் காலச் சோழர்களாலும், பாண்டியர்களாலும், பிறராலும் கோயிலுக்கும், கோயிற் காரியம் பார்க்கும் அந்தணர்க்கும் நிபந்தங்களும் உரிமைகளும் பலவாறு செய்யப்பெற்றதை கல் வெட்டுச் செய்திகள் உணர்த்துகின்றன. கல்வெட்டுகளில் குறிக்கப் பெறும் அரசர்கள் காலத்தில் எழுந்த கல்லெழுத்துக் களினமைப்பில் வடிவ மாறுபாடுகள் மல்கியிருப்பதாலும், பழைய கல்வெட்டுகளின் செய்தி முறைமைக்கு மாருக உரிமை யொன்றையே குறிப்பாகக் கொண்டிருப்பதாலும், பிற்கால முயற்சியின் காரணமாகத் தோன்றிய கல்வெட்டுகளென்றே இவற்றைக் கருத வேண்டியுளது.

இப்பகுதியினின்றும் மேலே செல்லும் வழி மலையொழுங் கிற்குத் திருப்பமடைகின்றது. இங்கு, மலை மேலிருக்கும் சுனை யொன்றிலிருந்து பெருகிவரும் அருவி நீரை ஒருமுகப் படுத்தி, அதனை இடபத்தின் தலைபோன்ற சிலையின் வாய் வழி யாகப் பெருகவிட்டு, நீர் வழியும் தாரையிலுள்ள பாறையில் இடபத்தின் மேல் உள்ள சிவலிங்கத்தின் உச்சியில் விழும்படி செய்துள்ளனர். இக்காட்சி மிகவும் மாட்சிமையாகவுளது. பின்னர், சற்றே செங்குத்தாகச் செல்லும் நெறி மேற்றளத்தை யடைகின்றது. இங்கு அமைந்துள்ள கோயிலே வடிவேலரின் திருக்கோயிலாகும்.

மலடிக்கல் :

கோயிலை வலமாகக் கொண்டு செல்லுவோமானல், மலை யின் ஒரு பகுதியாக உயர்ந்துள்ள பாறையின் உச்சிக்குச் செல்லும் வழியுள்ளது. இப்பகுதியின் வலப்புறமுள்ள பாறைகளின் நெறிவினிடையே கற்படுக்கைகள் செதுக்கப்

பட்டுள்ளன. இவற்றைப் பஞ்ச பாண்டவர் படுக்கைக ளென்பர். இங்கிருந்து உயர்ந்து செல்லும் பகுதியே செங் குன்றின் உச்சியாகும். இப்பகுதி தரை மட்டத்திற்குமேல் எண்ணூறடி உயர்ந்துள்ளது. குறுகிய இடத்தோடு கூடிய இம்முகட்டில் சிறிய வடிவில் பிள்ளையார் கோயிலொன்றும், கோவிலுக்கு முன்னர் இடப மண்டபமொன்றும் கட்டப்பட் டுள்ளது. இடப மண்டபத்தின் முன்னருள்ள சிறிய பாறை யில் வட்டெழுத்திலுள்ள கல்வெட்டொன்று ஐந்து வரிகளாக வுளது. தேய்ந்து சிதைவுகளுடன் இருப்பதால் படித்தறிதற் கியலவில்லை.

பிள்ளையார் கோயிலுக்கு வலப்புறம் குண்டுப் பாறை யொன்று ஒட்டி நிற்கின்றது, இப்பாறையைச் சுற்றி வருவ தற்குரிய வழி அரையடி அகலத்தில் உள்ளது. இக்கல்லை மலடிக் கல் என்றழைக்கின்றனர். மக்கட் பேறில்லா மகளிர் மும்முறைச் சுற்றிவரின் மக்கட் பேறடைவரென்று கொண்டு, வருத்திச் சுற்றச் செய்த மகளிருள் பலர், அருகிய நெறியில் கால் தவறி விழுந்து சிதைந்து வருவது இன்றும் நின்ற பாடில்லையாம்.

மக்கட் பேறின்மைக்குரியார் ஆண் பெண் ஆகிய இரு பாலருமென்னும் உடற்கூற்று நூலுண்மையொடு, பேடாகும் ஆணும், மலடாகும் பெண்ணும உலகிலுள்ளதைக் கண்டும், மகளிரை மட்டும் மலடாகக் கருதி, இப்பாறையைச் சுற்றச் செய்து, கொடுமைக் குள்ளாக்குவது அறிவுடையார் செய லாமோ? இச்செயலைக் கண்டு வருந்திய மாவட்டத் தண்டல் நாயகமாக விருந்த லாங்கலி துரையென்பார் அதன் ஒரு புறம் வலிய சுவரொன்றை எழுப்பித் தடுத்துள்ளார். இத்தகைய செயலுக்குக் காரணமாக இருந்த செய்தி, "வடிவேலர் மலடி கட்கு மகவருள் பூந்துறை நன்னாடு" என்னும் திருச்செங் கோடு திருப்பணி மாலை அடியாகும். மலைமீதுள்ள கோயிலி லும், பாறைகள் மீதும் வெட்டப்பட்டுள்ள் கல்வெட்டுகளை கி. பி. 1919-ல் அரசியலார் படியெடுத்துள்ளனர்.

**திருச்செங்கோடு:**

மலையின் அடிவாரச் சூழலாகும் நகரினைப் பற்றிய செய்தி யினைக் காண்போம். நகரின் நடுவேயுள்ள சிவன் கோயிலைக் கயிலாசநாதர் கோயில் என்றழைப்பர்; இக்கோயிலிலுள்ள புதுமை இடபக்கிணறேயாகும். கங்கைகொண்ட சோழேச் சரத்திலும், குடந்தையிலும் உள்ள சிங்கமுகக் கிணறுகளைப் போன்ற பாங்கில், இடபவடிவில் கட்டியுள்ளனர். கோயிலின் திருமுற்றத்தில் இடபக் கொட்டிலுக்குப் பக்கமாக அமைக்கப் பட்டுள்ள இக்கிணற்றின் தோற்றம் மிகவும் எழுச்சியாக வுளது.

(தொடரும்)

# இளங்கோ இராமன்

த. இராமநாதப்பிள்ளை B. A. Lond,
யாழ்ப்பாணம் பருத்தித்துறை

அற வாழ்க்கை எத்தன்மையதெனத் தெளிந்து அறத்தின் வழி வழுவாது ஒழுகுவோரே மக்கள் யாவருடைய நன்மதிப்பையும் பெறுவர். இராமன் அறத்தை நாட்டி நல்லோரை ஓம்பித் தீயோரை ஒறுத்து வேதநெறி நின்று ஒழுகினன். சிறந்த வாழ்க்கை நோக்கமுடையோனாகிய இராமன் தன் ஒழுக்கத்தில் எவரும் குறை சொல்லா வண்ணம் வினையாடி வாழ்ந்தான். இன்னணம் தன் வாழ்க்கைச் சிறப்பால் ஒப்பாருமிக்காருமின்றித் துலங்குதலான், இராமன் முழுமுதற் கடவுளின் திருவவதாரமெனப் படைக்கப் பட்டான். அறம் பொருள் இன்பம் என்னும் உறுதிப் பொருள் மூன்றினுடைய ரேரெல்லை கண்டமையால், இராமன் யாராலும் போற்றப்படும் காவியத் தலைவனாயினன். அரசிளங்குமரனாகிய இராமன் தன் வாழ்க்கையில் சிறந்து திகழ்தலைக் காட்டுவாம்.

## இளங்கோவின் இளமை

இராமன் சூரிய வம்சத்தில் புகழ்பெற்ற ஆழிவேந்தன் தசரதனுடைய அருந்தவப் புதல்வன். வசிட்ட மாமுனிவனை நல்லாசிரியனாகப் பெற்று இளமையில் வேதம் வேதாங்கம் முதலிய கலைகளைக் கற்று வில்வித்தை முதலியன பயின்று யாவராலும் புகழப் பட்டான். இராமன் தன் விவேகத்தாலும் அருமறை அறிந்த முனிவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தான். பொது மக்கள் இளங்கோ கருணை உடையோனாய் வளர்தலைக் கண்டு களிப்புற்றனர். அருளே உருவமாகிய இளங்கோ முகமலர்ந்து குடிகளை சேமம் வினவுதலைக் காண்க.

> எதிர்வரு மவர்களை யெமையுடை யிறைவன்
> முதிர்தரு கருணையின் முகமல ரொளிரா
> எதுவினை யிடரிலை யினிதினு மனையும்
> மதி தரு குமரரும் வலியர்கொ லெனவே.
>
> —திருவவதாரப் படலம்

இளங்கோ இராமனே தன் வேள்வி காத்தற்கு வல்லோன் எனக் கிளந்து விசுவாமித்திரன் அவனைப் பெற்று ஏகினேன். இராமன் வில்வீரனாகலின் பெண் கொலை புரிய விரும்பினானல்லன். தீவினை செய்வோர் ஆடவராயினும் சரி பெண்டிராயினும் சரி, தண்டத்திற்கு உரியோரே என முனிவன் விளக்கினனாக; இராமன் சழக்கியாகிய தாடகையைக் கொன்றான்.

இராமன் வேள்வி காத்துக் கடவுள் வழிபாட்டை ஓம்பி அரக்கரோடு பொருது வென்றான்.

### இளங்கோவின் காதல்

அகலிகை தவறியவளாகலின், அவளைத் தாயென வணங்கிச் செல்வுழி, மிதிலை நகரத்துக் கொடிகள் ஐயனை ஒல்லை வாவென்று அழைத்தன. களவு மணத்தையே தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன. மணம் பேசுவோரின்றித் தலைவன் தலைவியர் ஒருவரை ஒருவர் கண்டு காதலித்தல் தெய்வக் காதலாகும்.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
என்ன பயனு மில? [வாய்ச்சொற்கள்

என்றார் திருவள்ளுவ நாயனார்.

அயோத்தி அரசிளங்குமரனும் மிதிலை அரசிளங்குமரியும் ஒருவரை ஒருவர் கண்டனர். அழகெல்லாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்?

எண்ணரு நலத்தினா ளிணைய ணின்றுழிக்
கண்ணொடு கண்ணினைக் கவ்வி யொன்றையொன்று
உண்ணவு நிலைபெறு துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்.

—மிதி உலக்காட்சி படலம்

தலைவனும் தலைவியும் ஒருவர் கண்வழி ஒருவர் நுழைந்து ஒருவர் இதயத்தில் ஒருவர் உறைதலைக் கண்டாம். இராமன் வில் முறித்து வரம்பில் பேரழகினாளைப் பெற்றான். மிதிலை மடந்தையர் இளங்கோவைக் காணுதற்குத் தேனுகர் அளியின் மொய்த்தனர்; அவன் வடிவினை முடியக் கண்டார் இல்லை.

### தந்தை தாய் பணிதல்

இராமன் அயோத்தி திரும்பும் வழியில் பரசுராமன் தன் வில்லை வளைத்துப் பார்க்கும்படி அறை கூவினாகை, தசரத ராமன் வில் வளைத்து நாணேற்றித் தன் வில்லாண்மை காட்டினான். இங்ஙனம் இராமன் இளம் பிராயத்திலே அன்பும் வீரமும் அறஞ் செய்யும் விருப்பும் உடையோனாகத் துலங்கினான். இனி இளங்கோ தந்தை தாயர் சொற்கமைந்து அற நெறி நிற்றலைக் காட்டுதும்.

ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூமிவெங் கான நண்ணிப் புண்ணியப் புனல்க ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றேவின னரச னென்றாள்.

—கைகேசி சூழ்வினைப் படலம்

பரதனுக்கு அரசை அளித்துத் தவக்கோலம் பூண்டு கானகத்தில் பதினான்காண்டு கழித்து வருவாய் என்பது ஆழி வேந்

தன் கட்டளை எனக் கைகேசி மொழிந்தாள். இராமன் தந்தை தாயைப் பணிதலே மைந்தர்க்கு அழகென எண்ணினன்; தன் தம்பி பரதன் இளங்கோ ஆவான் என மகிழ்ந்தான்; முகமலர்ச்சியுடன் கானகம் போகின்றேன் என மொழிந்தான்.

மன்னவன் பணியன் றாகினும் பணிமறுப் பேனோவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியேன பெற்றதன்றோ
என்னிதி னுறுதியப் பாலிப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானமின்றே போகின்றேன் விடையுங்
கொண்டேன்.

—கைகேசி சூழ்வினைப் படலம்

தாய் கௌசலையின் துயரத்தையும் தந்தையின் துயரத்தையும் அறிந்துளனாயினும், தந்தையின் புகழைக் குன்றாவண்ணம் காத்தல் மகன் கடமை எனத் துணிந்தான். தந்தையின் வாக்கை நிறைவேற்றுதற்குத் தடையாகாதே, நின் கடன் துயருறுங் கொழுநனைத் தேற்றுதலே எனத் தாய்க்குச் சொல்லி மரவுரி தரித்து நகர் நீங்கினான். தந்தை செய்த தீவினையும் தாய் செய்த தீவினையும் நீங்கும்படி அரசை ஏற்க வேண்டுமெனப் பரதன் காடு சென்று தமயனை வேண்டினான். சமயத்தில் தான் கானகத்தில் காலம் கழித்தலும் பரதன் செங்கோல் செலுத்தலுமே செயற்பாலவை என்பதை இராமன் பரதனுக்கு விளக்கினான்.

### இளங்கோவின் வாழ்க்கை நோக்கம்

இராமனுடைய வாழ்க்கை நோக்கம் ஒரு மாநோக்கமாகும். என்னை! ஒழுக்கத்தாற் சிறந்த அந்தணரை ஓம்புதலிலும் சிறப்புடை நோக்கம் இன்றென அறநூல்கள் கிளக்கின்றன அல்லவா? இராமன் தன் வாழ்க்கை நோக்கம் தீயோரை ஒறுத்து அந்தணர்க்கு அபயம் அளித்தலே என உறுதி கூறுதலைக் காண்க.

அறந்த வாநெறி யந்தணர் தன்மையை
மறந்த புல்லர் வலிதொலை யேனெனின்
இறந்து போகினு நன்றிது வல்லது
பிறந்து யான்பெறும் பேறென்பதி யாவதோ.

—அகத்தியப் படலம்

ஒருவன் தன் உயிரைப் பிற உயிர்களுக்காகத் தியாகஞ் செய்தலே தெய்வத் தன்மையுடைய மக்கள் செயலாகுமென இராமன் பின்வருமாறு வற்புறுத்தினான்.

ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க் காயினும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குத்தொழுந் தேவர்க ளாகுவர். —அகத்தியப் படலம்

பிறர் பொருட்டுத் தம்முயிரை அர்பணஞ் செய்வோர் சுவர்க்கம் அடைதல் திண்ணம் என இராமன் முழு நம்பிக்கை

உடையவனாக இருந்தான். ஆதலினன்றே இராமன தெய்வ மெனத் தொழப்படுகிறான்.

### அரசிளங்குமரனின் மனித வியல்பு

நாகரிக வாழ்க்கைக்குரிய மனித வியல்பும் பண்பாடும் மிக்குத் திகழ்ந்தான் இராமன். இராமன் தன் நண்பர் யாவரையும் தன்னுயிரென ஓம்பினான். இளங்கோ குகனை ஏழை வேடன் என இகழ்ந்தானல்லன்; சடாயுவைத் தந்தையென அழைத்தான்; சுக்கிரீவனைத் தோழன் எனக் கொண்டான்; விபீடணனை அரக்கன் என வெறுத்தானல்லன். இலக்குமணன் நாகபாசத்தால் கட்டுண்டானாகத் தன் தம்பி இறந்தானோ என ஆவி சோர்ந்தான்; இனி உலக வாழ்வு வேண்டாமென்றான். இது நிற்க. இராமன் வரம்பில் பேரழகினை மாட்டுப் பேரன்புடையனாகத் துலங்கினான். மாயமானின் அழகைக் கண்டு சீதை அதைப் பிடித்துத் தரும்படி வேண்ட அரக்கர் வஞ்சகம் உணராத இளங்கோ மானைப் பின் தொடர்ந்தான். கற்பின் செல்வியை அரக்கன் கவர்ந்து சென்றானாக, இராமன் பெருங் கவலை கொண்டான்; தன்னுயிரை மாய்த்துக் கொள்ள எண்ணினான்; சீதையை இழக்க நேர்ந்ததையும் சடாயு இறந்ததையும் எண்ணி எண்ணி வேண்டாம் இம்மாயப் பிறவி எனப் புலம்பினான். கவலையால் செயலற்றுத் துறவறம் புரிதலே நன்றென இராமன் துணிய, இலக்குமணன் அரக்கரை அழித்தலே கடன் என்பதை விளக்கினான், இராமன் தன் இல்லாளை மீட்டற்கு முயலாதிருத்தலை எண்ணித் தன்மீது இரங்குதலைக் காண்க.

வாணெடுங் கண்ணியென் வரவு நோக்கயான்
தாணெடுங் கிரியொடுந் தடங்கள் தம்மோடும்
பூணெடும் புலம்பிப் பொழுது போக்கினேன்
நாணெடுஞ் சிலைசுமந் துழல நாணலேன்.

—கலன்காண் படலம்

இங்ஙனம் மூர்ச்சித்த இராமன் சுக்கிரீவன் தேற்றத் தேறினான்.

### தீயோரை ஒறுத்தல்

சுக்கிரீவன் அடைக்கலம் புகுந்தானாக, இராமன் வாலியை ஒறுத்து நீதி செலுத்தினான். வாலி குரங்கன்று அணங்கென்பதை எடுத்துக் காட்டிப் பகுத்தறிவுள்ள அணங்காகலின், நல்லொழுக்கத்தினின்று வழுவியது குற்றமென இராமன் இனிது விளக்கினான்.

நலங்கொள் தேவரிற் றோன்றி நவையறக்
கலங்க லாதற நன்னெறி காண்டலின்
விலங்க லாமை விளங்கிய தாதலால்
அலங்க லார்க்கி தடுப்பதன் றாமரோ. —வாலிவதைப் படலம்

நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வேற்றுமை உணர்ந்த நன்மைக்குந் தீமைக்கும் உள்ள வேற்றுமை உணர்ந்த வாலி தன் தம்பியின் மனைவியைக் கவர்ந்தது பிழை என இராமன் கண்டித்தான். இராமன் குரங்கோடு குரங்கு முறையில் போர் புரியவில்லை. ஆகலின் எச்சரிக்கையின்றி வாலியைக் கொன்றான்.

## இளங்கோவின் வீரம்

இனி இராமன் அறநெறி நின்று தன் பகைவனோடு போர் நீதி வழுவாது பொருதலைக் காட்டுதும். கண்ணீர்க் கடலில் மூழ்கியிருக்கும் கற்பினுக்கு அணியைக் கண்டு வந்தேன்; துயரம் களைக என அநுமன் சொன்னவுடனே, வில்வீரன் தன் இல்லாளை மீட்டற்கு எழுந்தான். அரக்கர் கோனுக்கு அங்கதனைத் தூதனுப்பிச் சீதையை விடுதலை செய்யுமாறு இராமன் வேண்டினன். இராவணன் இசைந்திலன்; பின்பு போர்க்களத்திலும் சீதையை விடுதலை செய்யும்படி இராமன் கிளத்தலைக் காண்க.

சிறையில் வைத்தவ டன்னைவிட்டு உலகில் தேவர்
முறையில் வைத்துநின் றம்பியை யிராக்கதர் முதற்பேர்
இறையில் வைத்து அவற்கேவல் செய்திருத்தியேல் இன்னுந்
தரையில் வைக்கிலன் நின்றலை வாளிற் றடிந்து.

—முதற் போர்புரி படலம்

போரில் தோல்வியடைந்து துணைவரின்றித் தமியனாக நின்ற இராவணனை விளித்து "இன்று போய் போர்க்கு நாளைவா" என்ற வீரனின் வீரமே வீரமென்க. இங்ஙனம் தன் பகைவர் மீதும் அருளுடையயோனாகத் துலங்குதலை கண்டு வியவாதாரில்லை.

## இராமன் பழி நாணுதல்

வெற்றி பெற்றவுடன் சீதையைக் கோலஞ் செய்து வரும்படி வீரன் அழைத்தான். அத்தருணத்தில் ஊர் பழி சொல்லா வண்ணம் அறஞ் செய்து வந்த அரசிளங்குமரன் பிறர் மனையிருந்த சீதையை ஏற்கலாமா என ஐயங் கொண்டான். தன் இல்லாள் பிறர் மனையைச் சிறிதும் விரும்பினாள் அல்லள் என இராமன் நாட்டவிழைந்தான். ஆகலின் பிறர் மனை இருந்த உன்னை ஏற்கலாமா எனத் தன் இல்லாளைக் கேட்டான். அருந்ததியன்னார் ஆறிய கற்பினளாகலின், தீப்புகுந்து தன் அறக்கற்பினை நாட்டினாள். யவன மொழியில் கோமர் எழுதிய காவியத்தில் இல்லறத்திலிருந்து வழுவிய அவளை மனிலேயன் ஏற்றான், ஆனால் பிறர் மனை செல்லும் மனைவியரை ஏற்கலாதென நம் காவியப் புலவர் நாட்டினார்.

சென்ற இதழின் தொடர்ச்சி :

# களவியல் உரை நலம்

## (முதல் நூற்பா உறை)

(திருவாட்டி. மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

---

இனி, இப்பாயிர ஆசிரியர்,

"கேட்போர் என்பது—இன்னார் கேட்டா ரென்பது. இந் நூல் கேட்டார் யாரோ எனின், குற்றமுடைய நூலாயி னன்றே குற்றமின்மை ஆராய வேண்டுவது. இது முனைவன் தன்னாற் செய்யப்பட்ட நூலாகலான் குற்றமின்றே. இன்மை யிற் கேட்டாரையும் இன்றென்பது. இன்றே எனினும் உரை நடந்துவாரா நின்றமை நோக்கிக் கேட்டாரையு முடைத் தென்பது. யாரோ கேட்டா ரெனின் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனுவான் உருத்திர சன்மன் என்பது. அவன் கேட் டற்குக் காரணஞ் சொல்லுதும்."

எனவுரைத்து முச்சங்க வரலாறு கூறுவான் தொடங்கு வர். இவரும் ஏனைய உரையாசிரியன்மார் போன்றே கேட் போர் என்ற சொற்குக் கேட்டார் எனப் பொருள் கண்டனர். இஃது மாதவச் சிவஞான யோகிகள் கருத்துக்கும் இசைவ தன்று. எம்போலியர்க்கும் ஏற்புடைத்தன்று. என்னை ?

"இக் கருத்தறியாத உரையாசிரியரை உள்ளிட்டோ ரெல்லாரும் நூலரங் கேறும் அவைக்களத்துக் கேட்டாரைக் கேட்போரென்றும்......கூறினர். ஆக்கியோன் பெயர், நுத லிய பொருள் என்பன போல இறந்த காலத்தாற் கூருது எதிர் காலத்தாற் கூறியதே அஃதுரையன்மைக்குச் சான்ரும்."

எனச் சிவஞான முனிவர் மறுத்தருளியமை காண்க.

இனி, குற்றமுடைய நூலாயினன்றே குற்றமின்மை ஆராய வேண்டுவது. இது முனைவன் தன்னாற் செய்யப்பட்ட நூலாகலான் குற்றமின்றே 'என்ற செய்தியும் நோக்கற் பாலது. முனைவனலருளப்பட்ட 'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி' என்ற பாடற்கன்றே "முற்றும் நீர் கண் ஆனலும் மொழிந்தநும் பாடல் குற்றம் குற்றமே" என்று வடுவேற்றிய கதை வழங்கப்படுவது. அன்றியும் முனைவர் நூலாகிய திருக்குறள் கேட்டாரையுமுடைத்தென்ற வரலா றும் எண்ணுக. ஆயின் கேட்டாரையின்றெனல் ஏற்றுக்கோ எனில் அது கந்தருவ வழக்கம் என்ற பகுதிக் கண் விரித் துரைக்கப்படும்.

## 6. களவு என்றதன் காரணம்

இதனை யடுத்து முன்னர் விரிக்கப் பெற்ற முச்சங்க வரலாறும் அதனை யடுத்து இக்கட்டுரையின் தொடக்கத்துக் கண் ஆராயப்பட்ட களவியல் வரலாறும் களவியற் குரை கண்ட வரலாறும் பேசப்படும். இவ்வுரையினை நக்கீரனு ருரைப்ப அவர் மகனார் கீரங்கொற்றனாரும் அவருரைப்பதே னூர் கிழாரும் அவருரைப்ப படியங் கொற்றனாரும் அவரு ரைப்ப செல்வத்தாசிரியர் பெருஞ் சுவனாரும் அவருரைப்ப மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனாரும் அவரு ரைப்ப செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங் குமாரனாரும் அவருரைப்ப திருக்குன்றத் தாசிரியரும் அவருரைப்ப மாதளவனார் இளநாகனாரும் அவருரைப்ப முசிறியாசிரியர் நீலகண்டனாரும் பெற்றனர் என்ற செய்தி உரை நடந்துவந்த முறையில் பேசப்படுகின்றது.

அடுத்து நூற்பயன் பேசப்பட்டு இந்நூற் பயனாவது வீடு பேறு என்றார். அஃது யாங்ஙனம் என்பதைக் களவு என்ற தன் காரணம் என்ற பகுதியில் விரித்தார். அப்பகுதி யாவரும் படித்தின்புறற் குரித்தாகலின் அதனை ஈண்டுத் தருதும்.

"என்னை, இது களவிய லன்றே, இது கற்க வீடுபேறு பயக்குமாறென்னை களவு, கொலை, காமம், இணை விழைச்சு என்பனவன்றே சமயத்தாரானும் உலகத்தாரானுங் கடியப் பட்டன. அவற்றுள் ஒன்றன்றோலோ இது எனின், அற்றன்று. களவு என்னும் சொற்கேட்டுக் களவு தீதென்பதூஉம், காமம் என்னும் சொற் கேட்டுக் காமம் தீதென்பதூஉ மன்று. மற்று, அவை நல்ல ஆமாறும் உண்டு. என்னை? ஒரு பெண் டாட்டி தமரொடு கலாய்த்து நஞ்சுண்டு சாவல் என்னு முள்ளத்தளாய் நஞ்சு கூட்டி வைத்து, விலக்குவாரை யில்லாத போழ் துண்பல் என்று நின்ற இடத்து அருளுடையான் ஒருவனதனைக் கண்டு இவளிதனை யுண்டு சாவாமற் கொண்டு போயுகுப்பலென்று அவளைக் காணாமே கொண்டுபோ யுகுத் திட்டான். அவளும் சன நீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான் சென்றாள். அது காணாளாய்ச் சாக்காடு நீங்கினாள். அவன் அக்களவினால் அவளை உய்யக் கொண்டமையின் நல்லூழிற் செல்லும் என்பது. மற்றும் இதுபோல்வன களவாகா. நன்மை பயக்கும் என்பது.

"இனிக் காமம் நன்றாமாறு முண்டு. சுவர்க்கத்தின் கண் சென்று போகந்துய்ப்பல் என்றும் உத்தர குருவின்கண் சென்று போகந் துய்ப்பல் என்றும் நன்ஞானங் கற்று வீடு பெறுவல் என்றும் தெய்வத்தை வழிபடுவல் என்றும் எழுந்த காமம் கண்டாயன்றே! மேன் மக்களாலும் புகழப்பட்டு மறு

மைக்கும் உறுதி பயக்கும் ஆகலின் இக்காமம் பெரிதும் உறுதி யுடைத்து என்பது. உறுதி யுடைத்தாமாறு: அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் இணைவிழைச்சுத் தீதென்ப. அஃதுண்டாமிடத்துச் சுற்றத் தொடர்ச்சி உண்டாம். உண்டாகவே, கொலையே, களவே, வெகுளியே, செருக்கே, மானமே என்றித் தொடக்கத்துக் குற்றம் நிகழும் என்பது. அது கேட்கவே, தலையாயினர் அதன் கணின்று நீங்குவர்

"இனி, இடையாயினர் பெண் என்பது எற்புச் சட்டகம், முடைக்குரம்பை, புழுப் பிண்டம், பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து. ஐயும், பித்தும், வளியும், குடரும், கொழுவும், புரளியும், நரம்பும், மூத்திர புரீடங்களும் என்று இவற்ற தியைபு பொருளன்று. பொருளாயின், பூவே, சாந்தே, பாகே, எண்ணெயே, அணிகலனே என்றி வற்றாற் புனைய வேண்டா தானியல்பாகவே நன்றாயின் என்று அதனசுபத் தன்மை உரைப்பக் கேட்டு நீங்குவர்.

"கடையாயினர் எத்திறத்தானும் நீங்கார். என்னை, பல் பிறப்பிடை ஆணும், பெண்ணுமாய்ப் பயின்று போகந் துய்த்து வருகின்றமையின். அவர்க்கு இது காட்டப்பட்டது. என்னை, 'பேதையைக் காதல் காட்டிக் கை விடுக்க' என்பதனால் அவன் தாழப்பட்ட இணைவிழைச்சினுள்ளே மிக்கதொன்று காட்டப்பட்டது. எஞ்ஞான்றும் மூப்புப் பிணி சாக்கா டில்லது, நிச்ச நிரப்பிடும்பை யில்லது. இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய் இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியுமுடையாராய்ப் பிறிதொன்றிற்கு ஊனமின்றிப் போகந் துய்ப்பர் என்று காட்டப்பட்டது என்பது. என்போலவோ எனின் கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறு போலவும் கலங்கற் சின்னீர் தெருளாமையா னுண்பானை அறிவுடையான் ஒருவன் பேய்த் தேரைக் காட்டி 'உதுக்காணாய், நல்லதொரு நீர் தோன்றுகின்றது. அந்நீர் பருகாய் இச்சேற்று நீர் பருகி என் செய்தி என்று கொண்டுபோய் நன்னீர் காட்டி ஊட்டியது போலவும், தான் ஒழுகா நின்றதோர் இணைவிழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கங் காட்டினான். காட்டவே, கண்டு, 'இது பெறுமாறு என்னை கொல்லோ' என்னும். எனவே, மக்கட் பாட்டினானும் வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவதன்று. தவம் செய்தாற் பெறலாம். என்னை?

'வேண்டிய வேண்டியாங் கெய்தலான் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.'

என்பதாகலான் என்பது. அது கேட்டு, இனியானும் தவஞ் செய்திதனைப் பெறுவல் என்று அதன் மாட்டு வேட்கையால்

தவம் செய்யும். செய்யா நின்றுனைப்' பாவீ, இதன் பரத் ததோ வீடு பேற்றின்பம் என்று வீடு பேற்றின்பத்தை விரித் துரைக்கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காட்டு அவலக் கவலை கையாற்றி னீங்கு மணியினது ஒளியும் மலரி னது நாற்றமும் சந்தனத்தது தட்பமும் போல உளநின்றெழு தரும் ஒரு பேரின்ப வெள்ளத்தது என்பது கேட்டு அதனை விட்டு வீடு பேற்றின் கண்ணே அவாவி நின்று தவமும் ஞான மும் புரிந்து வீடு பெறுவானும் என்பது. அவனை வஞ்சித்துக் கொண்டு சென்று நன்னெறிக்கணிறீ இயினமையின் களவியல் என்னுங் குறி பெற்றது.'

என்பர். காண்பன எல்லாம் கண்ணுதற் பெருமானின் கனிந்த திருவருளே என்னும் சிந்தை வல்லார்க்குக் காமம் எதிர்ப்படினும் படாவிடினும் ஒன்றே. அக்கருத்தமை யார் கான முறினும் பயனின்று. என்னை? அறுபான் மும்மை நாயன்மார்களுள் காமம் சுற்றத் தொடர்ச்சிக்கிடனுய்த் துன் பம் பயக்குமெனக் காேடினர் ஒருவருமின்று. இதனை னன்றே அப்பர் பெருமானர் 'காதல் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன், கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறி யாதன கண்டேன்' எனக் கூறிக் களித்தார்.

அன்றியும் இல்லற நெறிக்கண் நின்றார் தமிழுக்கெனவும் தன்னேரில்லாத் தலைவற் கெனவும் தமது அருமந்த மக்களை உய்க்கின் அதுவே பிறவியின் பயனுமன்றே! அதனை ஒழிந்து சுற்றத் தொடர்ச்சியென மருண்டு சமணர் போல் காடு சென் ருர் இம்மை நலமும் மறுமை நலமும் ஆய இரண்டையும் ஒருங்கிழந்தாரென்க. இதனுனன்றே வாளார் நெடுமாறன் வள்ளுவனர்

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு."

என ஓதிப் போந்தார். அன்றியும் இல்லறமே அறத்தாறு எனவும் ஏனைய நெறிகள் புறத்தாறு எனப் புகன்றமையுங் காண்க.

எனவே 'காமம் சுற்றத் தொடர்ச்சிக் கிடனுய்த் துன்பம் பயக்கும் என்ற விளக்கவுரை ஆசிரியர் காலத்துச் சமண புத்தங்களின் எழுச்சியால் மக்கள் பெற்ற மனவி கற்பத் தையே சுட்டிக் காட்டும். அச்சமயக் கருத்துக்களையே ஈண்டு வலியுறுத்தினர் என்பதற்கு,

"அவலக் கவலை கையா றழுங்கல்

என மணிமேகலையில் பயிலுந்தொடர் அப்படியே ஈண்டு மெடுத்து ஆளப்பட்டமை காண்க.

மற்றும் பெண் என்பது எற்புச் சட்டகம் எனத் தொடரும் உரையும் ஏற்புடைத் தன்று. என்னை? பெண்களுக்கு உளவாம் என்று இவர் கூறும் இலக்கணங்களனைத்தும் ஆண் மக்கட்கு முரியதே அன்றோ! இருபாலார்க்கும் இயைந்த இயற்கையின் கொடையினை ஒரு பாலார்க்கே சார்த்தியுரைத்தல் பழிபடு செயலாகும். அன்றியும் வீடு பேற்றின்பம் பெண்பாலார் விழையத்தகாத வொன்றோ? இவ்வகை இழிபுரைகள் சங்க காலத்த தன்றென்பது தேற்றம். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று வள்ளுவர் போற்றிய செயற்கும் 'பெண் என்பது ஏற்புச் சட்டகம்' என்ற ஏசு மொழிக்கும் எத்துணை வேற்றுமை. அன்றியும் கல்வியில் யாவரினுந் தலை நின்றார் ஔவையார் என்னும் பெண்பாற் புலவரா மன்றோ! பேயோடு கந்தாடும் பித்தனும் தாயெனப் போற்றி 'அம்மையே' என அழைத்த பெருமை பேயுருவெடுத்த பெருமாட்டி காரைக்காலம்மை யன்றோ பெற்றனள்?

ஒருவனை வஞ்சித்துக் கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறீஇயினமையின் களவியல் என்னுங் குறி பெற்றது என்பதும் அத்துணை ஏற்புடைத்தன்று. என்னை? இதனைக் கற்பியலென்று குறி பெற்றமைக்குக் காட்டலாவதோர் காரணமின்மையின். கற்பு நெறி போன்றே களவும் வரம்புடையதோர் ஒழுக்கமென ஏனைய நூற்கள் வரையறுத்தமை காண்க. இறையனாரும் 'கற்பெனப் படுவது களவின் வழித்தே' என்றே வேண்டுவர். இப்பாயிர ஆசிரியரும் மேலே

"சிறப்பினாற் பெயர் பெற்றது: களவியலென்பது என்னை? களவு, கற்பு என்னுங் கைகோளிரண்டனுள் களவினைச் சிறப்புடைத் தென்று வேண்டும் இவ்வாசிரியன். என்னை?

> "முற்படப் புணராச் சொல்லின் மையிற்
> கற்பெனப் படுவது களவின் வழித்தே."

என்று வேண்டுதலின். கற்பு, களவுபோல ஒருதலையான அன்பிற்றன்று."

எனக் கூறிப் போந்தார் எனவே களவு என்னுங் குறி பெற்றமைக்குக் காட்டப்பட்ட காரணம் ஆசிரியர் நக்கீரர் இவ்வொழுக்கத்தினை இல்லது, இனியது, நல்லது என்று புலவரால் நாட்டப்பட்ட ஒழுக்கம் என்ற கருத்தைத் தழுவியுரைக்கப்பட்டதாகும். மற்றும் ஒருவனை வஞ்சித்துக் கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறுவுந்தன்மை ஈண்டு மட்டுமே கேட்கப் படுவது; நூலினுள்ளும் உரையினுள்ளும் கேட்கப்படுவது அன்று என்பதையும் எண்ணுக.

(தொடரும்)

## ஆதிமந்தி

**ச. பாலசுந்தரம்**

அசைந்துவரும் தென்காலே ஆடல் மன்னன்
அடைந்தஇடம் கண்டால்நீ அறிவிப் பாயா?
இசைந்துவருங் குயிலினமே என் தலைவர்
எங்குற்ருர் என்றியம்ப மாட்டீரா? என்
பசைந்துருகும் உடல்கண்டும் பரிவு கொள்ளாப்
பைங்கிளியே! அத்தியைநீ பார்த்தால் என்னை
மிசைந்துகொளக் கூற்றுவன்வந் துள்ளான் இன்னே
விரைந்துவந்து காப்பாற்றென் றறிவி போபோ! (239)

[அப்பொழுது ஆதிமந்தியைத் தேடிவந்து கொண்டிருக்கும் சரத்குமாரன் அவள் தனித்திருந்து புலம்புவதைகண்டு வலிந்து கொள்ளுங் கருத்துடையவனுய்]

**சரத்குமாரன் :—**

வண்டாடும் சோலையிலே வானை விட்டு
வண்ணமதி வந்திறங்கி எனைய ழைத்தால்
கொண்டாடா திருப்பேனே?... குயிலே...

**ஆதிமந்தி :—** [வெகுளியோடு திரும்பி]

... ... ... ... ... ... யார்நீ?
கூசாமல் தனியிடத்திற் பெண்ணை கண்டு
மீண்டாடும் கயவரைப்போல் பேசுகின்ருய்?
மெல்லியலார் உளமறியாப் புல்லியன்நீ;

**சரத்குமாரன் :—**

பண்டேநான் உன்மீது காதல் கொண்டேன்
பக்குவமாத் தெரிவிக்கச் சமயம் இல்லை (240)

**ஆதிமந்தி :—**

தூய்மையுள்ள அச்சொல்லை உன்புன் வாயால்
சொல்லாதே செல்என்னை விட்டப்பாற் போ!

**சரத்குமாரன் :—**

ஆய்மயில்போல் மிளிருமுன தழகு வாட
அடியேனல் பார்த்திருக்க முடிய வில்லை

**ஆதிமந்தி :—**

போய்விடுநீ ... [எழுகின்ருள்]

**சரத்குமாரன் :—**

... ... ஆதிமந்தி! இனிமேல் அந்தப்
பொய்யனுனை எப்படியும் விரும்பான்; கெட்ட
பேய்ப்பயலை மறந்துவிடு ... [நெருங்குகிருன்]

**ஆதிமந்தி :—** [*சீற்றத்தோடு*]

…… …… சீச்சீ அந்த
பெருமகனைப் பற்றிஎதும் பேசினாயோ (241)

**சரத்குமாரன் :—** [வெடிபடச்சிரித்து]

பெருமகன்தான் பெருஞ்''சேரல்'' என்று சொல்லு!
பேதைமையால் அவனிடத்தில் ஆசை வைத்தாய்
ஒருநாளும் உன்விருப்பம் நிறைவேருதே…
உள்ளபடி ஆட்டனத்தி யார்என் றின்னும்
தெரியாமல் தவிக்கின்ருய்; ஆதிமந்தீ!
'சேரமன்னன் அவன்'ஆனல் இந்த உண்மை
தெரியாதின் றவனுக்கும் தெரிந்தால் நாளை
சிறிதேனும் உனை நினைக்க மாட்டான் அத்தி (242)

[அப்பொழுது சோலையில் ஒருபக்கத்துப் புதர் சலசலக்கிறது வெகுண்ட ஆதிமந்தி சரத்குமாரன் மொழியால் தாக்குண்டு]

**ஆதிமந்தி :—**

இல்லை,அவர் மன்னரில்லை என்குலத்தார்

**சரத்குமாரன் :—**

இதனை இரும் பிடர்த்தலையா ரிடம் போய்க் கேட்டால்
ஒல்லையிலே அவன்வரலாற றிந்து கொள்வாய்
உண்மையில்யான் சொல்வதைக்கேள் உன்மேல் நானே
எல்லையிலா ஆசைகொண்டுள்ளேன் …… ……

**ஆதிமந்தி :—** [*சீறி*]

…… …… …… சீச்சீ
எட்டப்போ! கயவா!என் னிடத்தே வந்து
தொல்லைசெய்வால் துயர்ப்படுதாய் …… ……

**சரத்குமாரன் :—** [பெருகச்சிரித்து]

துயரம்… உன்னுல் …… ……
தொள்ளாயிரம்வரினும் சுகமா ஏற்பேன் (243)

**ஆதிமந்தி :—**

விலங்கா நீ?

**சரத்குமரான் :—** [சிரித்து]

ஆமம்மாஉன் கைகளுக்கு

**ஆதிமந்தி :—**

விடப்பாம்பே …… …… ……

**சரத்குமாரன் :—**

…… …… பாம்பாட்டி நீயேஎன்ருல்
நலங்கமழும் மாணிக்கம் அளித்துவப்பேன்

**ஆதிமந்தி :—**

நாணமில்லாப் பேயே! ... ... ... ...

**சரத்குமாரன் :—**

... ... ஆம் உன்னைப் பற்றித்
துலங்கும்பேய்... கண்ணே! நான்சொல்வ தைக்கேள்

**ஆதிமந்தி :—**

தொடாதே... போ [அஞ்சியகல்கிருள்]

**சரத்குமாரன் :—** [வழிமறித்து நெருங்கி]

தொட்டால் ... ... ... ... ... ...

[மருதியுடன்வந்த இசைமுகிலோன் பின்புறத்தே அவன் பிடரில் ஓங்கி அறைந்து]

**இசைமுகிலோன் :—**

... ... ... ... ... ... தோலுரிந்துபோகும்

**மருதி :—**

கலங்காதே [எனச்சென்று ஆதிமந்தியை அணைத்துக்கொள்ள]

**ஆதிமந்தி :—** [மயங்கி]

ஆ! மருதி ... ... ... ... ... ...

**சரத்குமாரன் :—** [யாரென அறிந்து அஞ்சி]

... ... ... ... ... ... முகிலா?

**இசைமுகிலோன் :—** [வெறுப்பும் வெகுளியும் தோன்ற]

... ... ... ... ... ... சீச்சீ
கழிசடையே என்முகத்தில் விழிக்கா தேபோ (244)

மருதீ! உன் தோழியைப்பார்த் தழைத்துச் செல்யான்
மன்னர் அரண்மனைவரையிற் சென்று மீள்வேன்

[சரத்குமாரன் ஓடிவிட்டான் என்பதறிந்து பின்முகிலோன் செல்கிருன் எதிர்பாராமல்வந்த மருதியைநோக்கி வியந்தவளாய்]

**ஆதிமந்தி :—**

மருதீ! நீ எங்கிருந்து வந்தாய்? ... ... ... ...

**மருதி :—** [துயரோடு]

... ... ... ... ... ... ஆதி
மலர்வனந்தான் சென்றிருக்கக்கூடும் என்று
கருதியிங்கு வந்தேன் இக் கயவன் பின்பால்
கரந்திருக்கக் கண்டேன்போய் முகிலைத் தேடி,
வருதி என அழைத்துவந்தேன் அவர்க்குங் காட்ட
முடையனதற் குள்ளாக ... ... ... ...

**ஆதிமந்தி :—** [ஆர்வத்தோடு தழுவிக்கொண்டே]
…… …… …… மருதி !

**மருதி :** [அணைத்துக் கொண்டே]
…… …… …… தோழி ! (245)

[மகிழ்ச்சியும் துயரும் கலந்த கண்ணீரோடு இருவரும் செல்கின்றனர்]

இருபத்திமூன்ரும் காட்சி முடிவு.

## காட்சி 24.

**நடிகர் :** **வேலன்** **இடம் : வழிநடை**
**குன்றத்தோளன்** **காலம் : முற்பகல்**
**மாணவர்கள்**

[காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாத் தொடக்கம் அதுபோது விழாவைக்காண பலரும் வந்து குழுமுகின்றனர் விழாவைப்பற்றிய பேச்சு எங்கும் நிகழ்கிறது]

**வேலன் :**
தோரணமும் துகிற்கொடியும் கமுகுந் தெங்கும்
சோழன்தலை நகரெங்கும் பொலிவதைப்பார் !

**குன்றத்தோளான் :—**
வாரணமும் வீரர்களும் பரியும் தேரும்
வருதலின்னும் குறையவில்லை—இவ்விழாவைப்
பூரணமா அனுபவிக்க வேண்டும்… ஆமாம்

**வேலன் :—**
பொன்னிவளம் சென்னிவளம் என்றுசொல்லும்
காரணமிங் குற்றபின்தான் விளங்கிக் கொண்டேன்
காவிரிப்பெண் கவிதைக்குள் அடங்கு வாளா ? (246)

**குன்றத்தோளான் :—**
ஓங்குபுகா ரிந்திரவி ழாவென் றுலே
ஊரெல்லாம் திரண்டுவிடும்—அதற்குமேலே
வீங்குபுனற் காவிரிநீர் விழாவும் சேர்ந்தால்
விண்ணுலகும் வரவிழைதல் விந்தை இல்லை.

**வேளன் :—**
தாங்கவில்லை சனத்திரள் இவ்வுலகில் வாழும்
தலையாய கலைஞரெலாம் வந்துள் ளாராம் !

**குன்றத்தோளான் :—**
தூங்குவதற் கியலாதிப் பத்து நாளும்

**வேலன் :—**

தொடர்ந்துபல கலைநிகழ்ச்சி அமைத்துள்ளாராம் (247)

**குன்றத்தோளான் :**

சிற்றூராய் இருந்ததனை இளஞ்சேட் சென்னி
செழிப்புமிக்க நகராக்க—கரிகாலன் வந்(து)
எற்றாலும் இந்நகருக் கிணையே இல்லை"
என்றியம்பும் படியிதனை வளப் படுத்தான்
வற்றாத வளங்கொழிக்குங் காவிரிப்பெண்
வந்துகடல் மணக்கின்ற வள நாடன்றோ
கற்றோரின் கவிதையைப்போல் வளம் பொதிந்த
காவிரிப்பூம் பட்டினமே பட்டினந்தான் (248)

[பேசிக்கொண்டே செல்கின்றனர்—பின்னர் புகார் நகரத்துள்ள மாணவர்கள் பேசிக்கொண்டே வருகிறார்கள்]

**மாணவன் 1 :—**

காவிரிநீர்ப் பெருக்கைகழார்த் துறையில் சென்று
கண்டவர்கள் அதன்கவினை மறப்பா ரோசொல் ?

**மாணவன் 2 :—**

நாவலந்தீ விற்கேயோர் பெருமை ; நானை
நாட்டியத்திற் காட்டனத்தி வருகின்றாளும்

**மாணவன் :—**

காவலரே சிறப்பழைப்பு விடுத்துள்ளாராம்
கழார்த்துறையில் அரசர்அவர் பரிவா ரங்கள்
யாவருமே தங்க பல பாடி விடு
யாத்துள்ளார்; பார்த்தாயா ? ... ... ... ...

**மாணவன் 1 :—** [வியந்து]

...... ...... அடடா பொன்னி (249)

நீர்த்துறையில் அங்காடி வீதி வந்து
நிறைந்துவிட்ட தெங்கெங்கும் கடைகள்! நாளை
ஆர்த்தெழுந்து காவிரித்தாய் உள்ளம் பொங்கி
ஆடிவருவாள் ... ... ... ... ... ...

**மாணவன் 2 :—**

...... அதனால் ஆடி என்ற
பேர், தமிழர் இட்டனரோ ? ...... ......

**மாணவன் 1 :—**

... ... ... ... ... ... பின்புஆராய்ச்சி
பேசிடுவோம் இப்பொழுதிவ் வூரைச் சுற்றி
நேர்த்தியெலாம் கண்டுவரு வோம் வாநீயும் !

**மாணவன் 2 :—**

நீந்துகின்ற கலையில்அத்தி நிபுணன் ......

**மாணவன் 1 :—** [ஏதோ நினைத்தவனாய்]

... ... ... ... ... ... ஆமாம் (250)

ஆதிமந்தி ஆட்டனத்தி காதல் என்ன
ஆயிற்று? ... ... ... ... ... ...

**மாணவன் 2 :—**

... ... ... ... ... ... தெரியாதே ... ...

**மாணவன் 1 :—** [இரக்கத்தோடு]

ஐயோ பாவம்
பாதியிலே புயல்வீசி விட்ட தாமே!

**மர்ணவன் 2 :—**

பார்த்தாயா... ஊர்வம்பு பேசுகின்றாய்?

**மாணவன் 1 :—**

சேதிவந்து செவிப்பட்ட ததனைச் சொன்னேன்
சிலநாளா இருவருக்கும் வருத்தம் என்று

**மாணவன் 2 :—**

தூதுசொல்ல நீபோயேன்; தொணதொணப்பைத்
தொடங்கிவிட்டாய்? ... ... ... ... ... ...

**மாணவன் 1 :—**

... ... ... ... இனிமேல்யான் பேசவில்லை (251)

[இருவரும் செல்கிறார்கள்]

இருபத்திநான்காம் காட்சி முடிவு.

## காட்சி 25.

நடிகர் : (பாணன்) **கூத்தன்** இடம் : **புகார்நகர்ப்புறச்சோலை**
(செல்லி) **முல்லை** காலம் : **பிற்பகல்**

[திடுமென ஆட்டனத்தி காணுமற் சென்றதை எண்ணிக் கலங்கி நீர்விழாவில் வேந்தன் ஆணைப்படி ஆடவேண்டுமே என்ற கவலையாலும் அச்சத்தாலும் கூத்தப் பாணன் ஆட்டனத்தியை இடந்தோறும் தேடுகின்றான்]

**கூத்தன் :—**

நாடாள்வோன் பகைநமக்கும் வேண்டா மென்றால்
நாமென்ன செய்வதிந்த ஊரினுள்ளே
தேடாத இடமில்லை தேடி விட்டேன்

சென்றஇடம் தெரியவில்லை; ஆட்டனத்தி!
ஆடாதே என்றாலும் அமைய மாட்டாய்
ஐயோ உன் கலை! ... ...

[கலங்கிய கண்களோடு செல்லுகிறான் முல்லை எதிரே வருகிறாள் அவளைப்பார்த்து]

முல்லை! எங்கே இங்கே?

முல்லை :— [அழுது]
வாடாத மலராள்என் மகளைத் தேடி
வந்தேன் நீ? ... ... ... ... ... ...

கூத்தன் :— [வாட்டமாய்]
நானுந்தான் மகனைத்தேடி ... ... (252)
ஊரெங்கும் காவிரியின் வெள்ளம் போல
உவகையிலே திளைத்திருக்க நமக்கு மட்டும்
பாரிங்கே வந்ததுன்பை;

முல்லை :— [தன்னையே நொந்து]
... ... ... ... ... ... பாவிநான்தான்
பைங்கிளிபோல் வளர்த்துமவள் உள்ளம்போல
சீரிங்கே செய்யாமல் ... ... ... ... ... ...

கூத்தன் :— [தேறுதலாக]
... ... ... ... ... ... சென்றதைநீ
சிந்திப்ப தாலொன்றும் பயனேஇல்லை

[அப்பொழுது முகிலோன் அப்பக்கம் வருகிறான் அவனை நோக்கி]

ஆரங்கே? முகிலோனா? ...ஏடா! தம்பி
ஆட்டனத்தி எங்கேனும் தென்பட் டானா? (253)

முகிலோன் :—
நானுமிங்கே அவனைத்தான் தேடி வந்தேன்

கூத்தன் :—
நல்லதப்போ வாருங்கள் கழாஅர்க்குப் போவோம்

[செல்லுகின்றனர் அவர்கள் சென்றபின் தன்னிலை மறந்தவனாய் ஆட்டனத்தி அவ்வழியே வந்துநின்று]

ஆட்டனத்தி :—
மானனைக்கும் விழியாள், என் மனம்பு குந்த
மாதரசே! உனைப்பிரிந்து வாழ கில்லேன்

யானெங்குச் சென்றிடுவேன்?...வாழ்வில் நாளை
யாற்றினிலே...காவிரித்தாய் மடியின்மேலே
மீனைப்போல் துள்ளிவிளை யாடவேண்டும்
மேலிடத்தார் ஆணை[சிரிப்பு] ஆம் ஆதிமந்தி (254)
மட்டுண்டு களிப்பவரும் மடுவில்நீந்தி
மகிழ்ந்தாடிக் களிப்பவரும் மகளிரின்பால்
கட்டுண்டு களிப்பவரும் காட்சிமுற்றும்
கண்டின்ப வெள்ளத்தில மூழ்க... நானேன்
வெட்டுண்ட புழுவைப்போல் துடிக்க வேண்டும்?
வேதனையைக் காவிரியின் வெள்ளத்தோடே
கொட்டுண்டு போமாறு செய்வேன்... ஆமாம்
கோதை! நீயேனுமிங்கு வாழ்தல் வேண்டும். (255)
முன்பே நான் மடிந்திருப்பேன் என்னைத் தேட
முயன்றுனது வாழ்வைப்பாழ் செய்து கொள்வாய்;
அன்பேஅக் கொடுமையைஎன் ஆவி தாங்கா(து)
அரசன் உயர் ஆணையையும் மீறி உன்றன்
இன்புமிகு வாழ்வினையும் கெடுத்தோனுகா(து)
இவ்விழவில் பலர்காண ஆற்றின் நீரில்
துன்பமின்றி நீந்திஉயிர் நீத்துச் செல்லத்
துணிகின்றேன் தோகாய்! என் பிழைபொறுப்பாய் (256)

[போகிருன் அவனைப்பின் தொடர்ந்துவரும் சரத்குமாரன் அவன் போனபின் வஞ்சமும் பொருமையும் தோன்ற]

**சரத்குமாரன் :—**

கொன்றவனை இங்கேயே புதைத்தால்... வேண்டாம்
குறிப்பாக உலகென்மேல் ஐயங் கொள்ளும்
இன்றிவனை ஒழித்தால்தான் உள்ளம் ஆறும்
எப்படியும் அவளைஇவன் அடையா வண்ணம்

[உடையில் மறைத்து வைத்துள்ளவாளை எடுத்துப்பார்த்துக் கொண்டே சிரித்துவிட்டுப்பின் சிந்தை மாறியவனுய்]

வென்றியிந்த வாளுக்கா கொடுப்பேன்?... மூளை
வீரனுக்குப் படைக்கலமா வேண்டும்... ஆமாம்

[சிறிது சிந்தனை]

அன்றிவனைத் தொலைப்பதெவ்வா(று)... ஆற்றில் நீந்தி
ஆடும்போ தொழிக்கவழி தேடவேண்டும் (257)
நேயமுளேன் போலிவனை நெருங்கி நின்று
நிறைநஞ்சை நீரோடு கலந்து வீசி
மாயவகை செய்வேன்... நீர்த் துருத்தி மூலம்
மயக்கமருந் தைக்கலந்து செலுத்த வேண்டும்

[தன்பால் உள்ள நஞ்சுப் பொக்கணத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டே சிரித்துவிட்டுச் செல்கிருன்—சரத் குமாரனையே பின்பற்றி ஆய்ந்துவரும் மருதி மறைவிலிருந்து வெளிப்பட்டு]